# மாதிரி வினாத்தாள் - 1

## பத்தாம் வகுப்பு

## தமிழ் இரண்டாம் தாள்

காலம் : 2.30 மணி　　　　　　　　மொத்த மதிப்பெண் : 100

குறிப்பு : 1. கையெழுத்து தெளிவாய் இருத்தல் வேண்டும்.
2. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.
3. கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை, முடிவுரைகளைக் கொண்டு விளங்குதல் வேண்டும்.

-------

**I. எவையேனும் ஐந்தனுக்கு விடை எழுதுக.　　(5 × 1 = 5)**

1. இமயமலை மிகவும் உயரமானது – உணர்ச்சித் தொடராக மாறுக.
2. தேசியக்கொடி தலைமையாசிரியரால் ஏற்றப்பட்டது. (தன்வினை, செய்வினை, செயப்பாட்டுவினை) – இத்தொடர் எவ்வகை.
3. காந்தியடிகள் உண்மை பேசாமல் இரார் (எதிர்மறை, பொருள்மாறா எதிர்மறை) – இத்தொடர் எவ்வகை.
4. தொகை உவமைகளை விரியுமையாக மாற்றுக.
   அ. மதிமுகம்　　　ஆ. பவளவாய்
5. விடுபட்ட இடங்களை நிரப்புக.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கட / னென் / ப | ...................... | புளிமாங்காய் |

6. நேற்று மாலை புயல் வீசியது; மரங்கள் சாய்ந்தன ...................... கலவைச் சொற்றொடராக மாற்றுக.
7. வாரியார் "குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்க வேண்டும் என்றார் – அயற்கூற்றாக மாற்றுக.

**II. கீழ்க்காணும் அனைத்திற்கும் விடை அளிக்கவும்.　(5 × 1 = 5)**
**ஏதேனும் ஒன்றினை மட்டும் பொருள் மாறாமல் வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

8. அ. ஆயிரங்காலத்துப் பயிர்
   ஆ. தாயைக் கண்ட சேயைப் போல
   இ. பரம்பரை பரம்பரையாக
9. **வழூஉச் சொல்லற்ற தொடர் எது?**
   அ. வலது பக்கம் சுவறில் எழுதாதே
   ஆ. வலப்பக்கச் சுவரில் எழுதாதே
   இ. வலப்பக்க சுவற்றில் எழுதாதே

http://www.studentsbooklet.com/

10. **பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?**
அ. அவர்களிருவருக்கும் இடையே விவாதம் நடந்தது.
ஆ. அவர்களிருவர்க்கும் இடையே உரையாடல் நடந்தது.
இ. அவர்களிருவர்க்கும் இடையே கான்வர்சேசன் நடந்து.

11. **தொகைச் சொற்களை விரித்தெழுதுக.**
அ. மூவேந்தர் ஆ. நானிலம்

12. **உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுது.**
நான் திருக்குறளில் ஆர்வம் மிகுதி.

## III. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி. (3 × 1 = 3)

13. **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
அ. போற்றி ஆ. களைந்தோம்

14. **பிரித்தெழுதுக.**
அ. வந்தணைந்த ஆ. நாற்பொருள்

15. **இலக்கணக்குறிப்பு தருக.**
அ. எய்தாப் பழி ஆ. செவியறுத்த

## IV. கீழ்க்காணும் வினாக்களுக்குரிய விடையைத் தேர்ந்தெழுதுக. (10 × 1 = 10)

16. மாடு கன்றை ஈன்றது – இத்தொடரில் மாடு என்பது ...................... குறிக்கும்.
**அ. பசு ஆ. காளை இ. கன்று**

17. ஒரு பொருள் குறித்து வரும் சொற்களையே ...................... என்பர்.

18. **பொருத்துக.**
1. ஈறுபோதல் – வெற்றிலை
2. ஆதிநீடல் – செந்தமிழ்
3. இனமிகல் – செம்மொழி
4. தன்னொற்றிரட்டல் – மூதூர்

19. மருத நிலத்திற்குரிய தெய்வம் ......................
அ. முருகன் ஆ. திருமால் இ. இந்திரன்

20. உலகு என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்ப்பாடு ...................... ஆகும்.
அ. நாள் ஆ. காசு இ. பிறப்பு

21. உரிய வினை மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
பாரதியார் செய்யுளை ...................... (பாடினார், இயற்றினார்)

22. பிறமொழிச் சொற்களை நீக்கி, உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.

http://www.studentsbooklet.com/

23. பொருத்துக.

| நிலம் | | விலங்கு |
|---|---|---|
| 1. குறிஞ்சி | – | முயல், மான் |
| 2. முல்லை | – | புலி, கரடி |
| 3. மருதம் | – | முதலை, சுறா |
| 4. நெய்தல் | – | எருமை, நீர்நாய் |

24. பொருத்துக.

| அரபு எண்கள் | | தமிழெண்கள் |
|---|---|---|
| 1. 100 | – | கருo |
| 2. 120 | – | கஎo |
| 3. 150 | – | உoo |
| 4. 170 | – | கஉo |
| 5. 200 | – | கoo |

25. சொற்களுக்கு இருபொருள் தருக.

1. ஆறு ........................ ........................
2. மெய் ........................ ........................

## V. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் *ஐந்தனுக்கு* விடை தருக. (5 × 2 = 10)

26. வினைமுற்றைக் கொண்டு எவ்வெவற்றை அறியலாம்?
27. அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
28. சுட்டு விடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
29. செம்மை + மொழி எவ்வாறு புணரும்?
30. முதற்பொருள் என்பது யாது?
31. வெண்பாவின் வகைகள் யாவை?
32. குறள் வெண்பாவின் இலக்கணம் யாது?

## VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் *ஆறனுக்கு* விடை தருக. (6 × 4 = 24)

33. ஐகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
34. பொதுமொழி என்றால் என்ன? சான்றுகாட்டி விளக்குக.
35. தெரிநிலை வினைமுற்றைச் சான்றுகாட்டி விளக்குக.
36. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது?
37. **"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
    வேந்தர்க்கு வேண்டும் பொழுது"** – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.
38. வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.

http://www.studentsbooklet.com/

39. வல்லினம் மிகுமிடங்கள் ஏதேனும் நான்கினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40. பைங்கூழ் – பிரித்தெழுதி புணர்ச்சி விதி கூறுக.

## VII. கீழ்க்காணும் பத்தியை மூன்றில் ஒரு பங்கு சுருக்கி எழுதுக. (1 × 5 = 5)

மனிதன் தன் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தக் கையாண்ட கருவியே மொழி. இம்மொழியிலும் முதன் முதலில் கவிதை அல்லது செய்யுள்நடையே பயன்படுத்தப்பட்டு வந்தது. மொழி நூலறிஞர்களான ஜெஃபர்சன், எமர்சன் போன்றோரும் இலக்கிய வரலாற்றில் கவிதை நடையே உரைநடைக்கும் முற்பட்ட காலத்ததாகும் எனும் கருத்துடையவர்களாவர்.

காலப்போக்கில் உரைநடையையும், செய்யுளையும் கலந்து கதை நூல்களை ஆக்கத் தொடங்கினர். இவற்றை **உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்** என்று குறித்தனர். இவ்வகையில் பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை, சிலப்பதிகாரம் ஆகியவை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனப்படுகின்றன. பின்னர் பல்லவர் காலத்தில் வாழ்ந்த சில சமண முனிவர்கள் சரிக்குச்சரி அளவினதாக வடமொழியும், தமிழும் கலந்து எழுதப்படும் ஒரு புதிய உத்தியைக் கையாண்டனர். இது **மணிப்பிரவாள நடை** எனப்பட்டது.

இம் மணிப்பிரவாள நடையில் ஸ்ரீபுராணம், சத்திய சிந்தாமணி போன்ற வசன நூல்களை எழுதினர். இம் முறை வெற்றி பெறாது அழிந்ததாயினும் தமிழில் ஜ, ஸ, ஷ, க்ஷ, ஹ எனும் 5 சிறந்த எழுத்துகளின் ஓசை புகுந்து கலப்பதையும், மிகுதியான வடசொற்கள் கலப்பதையும் இது இயல்பாக்கிவிட்டது. இக்காலத்து தோன்றியதாகக் கருதப்படும் இறையனார் களவியல் உரையில் சிறிது கடினமான நடையில் அமைந்த உரைநடை அமைந்திருக்கக் காணலாம். இதன் அமைப்பு பொருளுணரக் கடினமாக இருந்தமையின், நக்கீரர் இதற்கு எளியதோர் உரை வகுத்தார். இதுவே காலத்தால் முந்திய உரை.

## VIII. கீழ்க்காணும் ஏதேனும் ஒன்றைக் குறித்து கடிதம் எழுதுக. (1 × 10 = 10)

அ. பேருந்து வசதி வேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.

(அல்லது)

ஆ. நீவிர் கண்டுகளித்த இடம் குறித்து, உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

http://www.studentsbooklet.com/

**IX. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஒன்றரைப் பக்க அளவில் கட்டுரை வரைக. (1 × 10 = 10)**

அ. தமிழ்மொழியின் சிறப்புகள்

ஆ. மழைநீர் சேகரிப்பு

இ. தீண்டாமை – ஒரு குற்றம்

**X. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் ஒன்றரைப் பக்க அளவில் கட்டுரை வரைக. (1 × 10 = 10)**

அ. அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

ஆ. 'குறட்டை ஒலி' கதையின் கருத்தும் பொருளும் மாறாமல் சுருக்கி எழுதுக.

இ. தமிழகத்தில் நூலகத்துறையின் வளர்ச்சிப் பற்றிக் கட்டுரை வரைக.

**XI. தமிழாக்கம் செய்க.**

**அ. கீழுள்ள ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க. (1 × 4 = 4)**

This is the age of computers. Computers are becoming more and more a part of everyday life. Today in the running of business, firm, industrial concerns and Government departments, lot of information processing is required. The computer is the superfast information processing unit.

**ஆ. கீழுள்ள ஆங்கிலப் பழமொழிக்கு ஏற்ப தமிழ் பழமொழிகளை எழுது. (4 × 1 = 4)**

1. All that glitters are not gold.
2. Art is long but life is short.
3. Barking dogs seldom bite.
4. Time and tide wait for no one.